**தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம், ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் சார்பில் சேகரிக்கப்பட்ட வருமானம் ஏனைய பெறுகைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், அவ்வாறு சேகரிக்கப்பட்ட ரூபா 2,799,938 தொகையான பெறுகைகளில் ரூபா 114,754 தொகையான பெறுகைகள் மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. அதற்கமைய, பெறுகைகள் ரூபா 2,685,184 குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது. | பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ரூபா 79,626 நானாவித வருமானம், ரூபா 2,167,240 விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்புக்கள் மற்றும் ரூபா 553,772 கடன் வட்டிகள் முறையே ஏனைய பெறுகைகள், சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய நலன்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கீழ் நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) நிதிச் செயலாற்றல் கூற்றின் தொகைகள் மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி இறுதிக் கணக்குகளின் தொகைகளின் அடிப்படையில் காணப்படல் வேண்டும். அதற்கமைய, நடவடிக்கை எடுக்கப்படாமையினால், திறைசேரி இறுதிக் கணக்குகள் அறிக்கையுடனான வேறுபாட்டினை சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டவறு அவதானிக்கப்பட்டன. | பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |
| (i) வைப்புக்களின் பெறுகைகள் ரூபா 28,473 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை | | |

(ii) வைப்புக்களின் செலுத்துகைகள் ரூபா 7,800 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை.

(iii) முற்பணங்களின் பெறுகைகள் ரூபா 318,150 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை

(iv) முற்பணங்களின் செலுத்துகைகள் ரூபா 489,670 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை

(v) மீண்டெழும் மற்றும் மூலதன செலவினம் ரூபா 1,745,000,000 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை.

(vi) மேற்குறித்த அவதானிப்புக்கள் காரணமாக, திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிச்செயலாற்றல் கூற்றின் பிரகாரம் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1,747,492,991 இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுநிதி சரிப்படுத்தல் கணக்கில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) திணைக்களத்தினால் ஏனைய செலவினத் தலைப்பிற்காக செலவிடப்பட்ட ரூபா 1,745,477,389 தொகையொன்று கட்டுநிதி சரிப்படுத்தல் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி இறுதி கணக்குகள் கூற்றுகளுக்கிடையே தொடர்ந்தும் காணப்பட்ட பின்வரும் வித்தியாசங்கள் சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- ரூபா 28,398 தொகையான வைப்புக்களின் பெறுகைகள்
- ரூபா 7,800 தொகையான வைப்புக்களின் செலுத்துகைகள்

**(ஈ) கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய உறுதிப்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு முறைமையின் வினைத்திறன் எழுத்தில் அவ்வவ்போது மீளாய்வுசெய்யப்படவேண்டியதுடன், அவற்றின் பிரதிகள் கணக்காய்வின் தலைமை அதிபதிக்கு கிடைக்கப்பெறச்செய்தல் வேண்டும். இருப்பினும், அந்த கூற்றுக்கள் 2019 மே 31 வரையிலும் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) மறறும் 38(2) ஆம் உப பிரிவுகளின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படல் வேண்டும். | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 04 செலவின விடயங்களுக்கு மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், குறித்த ஏற்பாடுகளினைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் தொடர்புடைய செலவின விடயங்களின் ஏற்பாடுகளின் 45 சதவீதம் தொடக்கம் 76 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். | இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களினை கொள்வனவு செய்வதற்கு மற்றும் புதுப்பிப்பதற்கு தேவையொன்றுஎழாமை மற்றும் பெறுகை நடைமுறையினை பின்பற்றுவதற்கு போதுமான காலப்பகுதி காணப்படாமை போன்ற காரங்கள் காரணமாக, ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததென கணக்கீட்டு உத்தியோகத்தர் அறிவித்திருந்தார். |

**2.2 அரச உத்தியோகத்தர் கணக்கிற்கான முற்பணங்களின் இணக்கக்கூற்று**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களினைத் தவிர 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிக் காணப்பட்ட ரூபா 1,002,305 தொகையான கடன் மீதி நிலுவைகள் தொடர்ந்தும் காணப்பட்டன. அந்த மீதிகளில் ரூபா 825,529 கடன் மீதிகள் 2019 மே 31 வரையிலும் | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இறந்த உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 176,776 தொகையான கடன் மீதியொன்று இறந்தவரின் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. ஏனைய கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டன. அந்தக் கடன் மீதிகள் 5 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக தொடர்ந்தும் நிலுவையாகக் காணப்பட்டன. | | |
| (ஆ) | இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக ரூபா 526,379 தொகையான கடன் மீதிகள் தொடர்ந்தும் காணப்பட்டன. இருப்பினும், அதில் ரூபா 149,530 தொகையொன்று 2019 மே 05 இல் அறவிடப்பட்டிருந்ததுடன், ரூபா 376,849 கடன் மீதிகள் மேலும் நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டது. 2004 ஒக்தோபர் 04 இன் 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை நிலையமொன்றிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தரொருவரின் கடன் மீதிகள் 03 மாதங்களுக்குள் அறவிடப்படவேண்டிய போதிலும், கடன் மீதிகளினை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கூட்டுறவு அபிவிருத்தி வடமேல் மாகாண திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் மீதிகளினை தீர்ப்பனவுசெய்வதற்கு ரூபா 149,530 தொகையொன்று பெறப்பட்டது. ஏனைய கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான முற்பணக் கணக்கு மீதியில் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களுக்கிடையே ரூபா 215,169 வித்தியாசமொன்று வெளிப்படுத்தப்பட்டது. | நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்கள கணக்குப் புத்தகங்களுடன் திறைசேரி புத்தகங்களின் இணக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். | பல ஆண்டுகளாக தொடர்ந்தும் காணப்படும் இந்த வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கணக்காய்விற்காக 94 நிதிக்கூற்றுக்களினைப் பெற்றுக்கொள்வற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டுறவு சங்கங்கள் 67 நிதிக்கூற்றுக்களினை மாத்திரம் சமர்ப்பித்திருந்தது. மீதி நிதிக்கூற்றுக்களின் | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளினை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கூட்டுறவு சங்கங்களில் போதுமான அறிவொன்றுடன் ஆளணியினர் பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அது அறிக்கைகளினை தாமதமாக சமர்ப்பிப்பதற்கான காரணமாகக் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் திணைக்களம் அந்த நிதிக்கூற்றுக்களை பெற்றுக்கொள்வதற்கு தவறியிருந்தது. மேலும், 70 இறுதிக் கணக்காய்வு அறிக்கைகளினை விடுவிப்பதற்கு இலக்கிடப்பட்டது. ஆனால், 45 அறிக்கைகள் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தது. | | 2018 ஆம் ஆண்டில் அவற்றிற்கு முறையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது அமுல்படுத்தப்பட்டிருக்காததுடன் அது கணக்குகளின் தாமதத்திற்கு தாக்கமளித்திருந்தது. |
| (ஆ) 1972 இன் 5 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 43(அ)(2) ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த கணக்குகள் மீதான கூற்றுக்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் புள்ளி விபரங்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 3 மாதங்களுக்குள் பதிவாளர்க்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும், பதிவாளர்க்கு 2018 திசெம்பர் 31 வரை 24 கூட்டுறவு சங்கங்களினால் 34 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் பதிவாளரினால் நிதிக்கூற்றுக்களினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 திசெம்பர் 31 வரை 24 கூட்டுறவு சங்கங்கள் 34 நிதிக்கூற்றுக்களை திருத்தஞ்செய்ய வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். |
| (இ) செயற்பாடற்ற கூட்டுறவு சங்கங்களுக்காக 50(அ) அறிக்கையை வழங்குதல், பதிவை இரத்துச் செய்தமையை பிரசுரித்தல், கலைப்பாளர்களினை நியமித்தல் மற்றும் கலைப்புச் செயற்பாடுகளினை அமுல்படுத்தல் போன்ற மீளாய்வாண்டிற்காக திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | செயற்பாடற்ற கூட்டுறவு சங்கங்களுக்கான 50(அ) அறிக்கைகளினை சமர்ப்பிக்கும் செயற்பாடு திணைக்களத்தின் சங்க பிரிவினால் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சங்கப் பிரிவிடமிருந்து அவ்வாறான எவ்வித அறிக்கையும் பெறப்பட்டிருக்காமையினால், பின்தொடர் நடவடிக்கைகளினை எடுப்பதற்கான சாத்தியம் காணப்படவில்லை. |

### 3.2 நிறைவேற்றப்படாத தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2013 ஏப்ரல் 26 ஆந் திகதிய அமப/13/0409/540/005 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், கூட்டுறவு கிராமிய வங்கிகள், கிராமிய வங்கிக் கழகங்கள், சனச சங்கங்கள், சனச கழகங்கள் மற்றும் ஏனைய நிதிசார் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளினை கண்காணிப்பதற்கு விசேட கண்காணிப்பு | கண்காணிப்பு செயற்பாடுகள் தொடர்பில் முறையான ஒழுங்கமைப்பொன்றை திணைக்களத்தினுள் அமுல்படுத்தப்படல் வேண்டும். | நிதிச் சேவைகளினை கண்காணிப்பதற்கான வரைபு சட்ட விதிகள் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. ஆகையினால், இந்தக் |

| | | | |
|---|---|---|---|
| | அலகொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, கண்காணிப்பு அலகை ஸ்தாபிப்பதற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 20,997,850 தொகையொன்று ஏற்பட்டிருந்தது. அந்த அலகு ஆரம்பித்ததிலிருந்து 06 வருடங்கள் காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், கண்காணிப்பு செயற்பாடுகள் தொடர்பில் முறையானதொரு ஒழுங்கமைப்பை திணைக்களம் செயற்படுத்தியிருக்கவில்லை. | | கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியாதிருந்தது. |
| (ஆ) | நிதிச் சேவை சங்கங்கள் தொடர்பான விபரங்களினை உள்ளடக்கி தரவு வங்கியொன்றை ஆரம்பிப்பதற்கு மற்றும் முறையான வடிவமொன்றின் பிரகாரம் அடிப்படையான விபரங்களினை சேகரித்து நாளதுவரையாக்குவதற்கு கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கிராமிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஏனைய நிதி சேவைகளினை கண்காணிப்பதற்கு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் அடிப்படை தரவு சேகரிப்பும் நடாத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அவற்றிற்கு ரூபா 5,920,186 தொகையொன்று ஏற்பட்டிருந்தது. இருப்பினும், நாடு முழுவதும் ஸ்தாபிக்கப்பட்ட கிராமிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் ஏனைய நிதிசார் சேவைகள் தொடர்பில் தரவு முறைமையொன்று திணைக்களத்தில் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் தரவு முறைமையொன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். | மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தினால் வேண்டப்பட்ட சங்கங்களின் விபரங்களினைப் பெற்றுக்கொள்ளாமை காரணமாக தரவு வங்கியை உருவாக்க முடியாதிருந்தது. |
| (இ) | கிராமிய வங்கிகள் தவிர ஏனைய நிதிசார் கழகங்கள் மற்றும் சனச கழகங்களை நிர்மாணிப்பதற்கான முறைமை திணைக்களத்தில் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிதிசார் சேவை கழகங்களுக்கான மற்றும் சனச கழகங்களைக்கூட கண்காணிப்பதற்கான முறைமை அமுல்படுத்தப்படல் வேண்டும். | ஏனைய நிதிசார் சேவை கழகங்கள் மற்றும் சனச கழகங்களினை கண்காணிப்பதற்கு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது |

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களினை கொள்வனவுசெய்வதற்கு 9 மாகாண நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம், சிறிலங்கா கென்சியூமர் கொப்பரேடில் சொசைடி (லிமிட்டட்) மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கான வட்டியில்லாக் கடன்களாக திணைக்களத்தின் சுழற்சி நிதியிலிருந்து ரூபா 632.5 மில்லியன் தொகையொன்று அளிக்கப்பட்டிருந்தது. கடன்கள் வழங்கப்பட்ட பின்னர் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும், உடன்படிக்கைகளின் பிரகாரம் கடன்கள் மீளச்செலுத்தப்பட்டிருக்காமையினால், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியவையாக ரூபா 224.05 மில்லியன் தொகையொன்று தொடர்ந்தும் காணப்பட்டது. ஆனால் திணைக்களம், கடன்களினை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | கடன்களினை அறவிடுவதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையாகவுள்ள கடன்களினை உடனடியாக அறவிடுவதற்கு தொடர்புடைய கழகங்களின் பணிப்பாளர் சபைக்கு எழுத்தில் கடிதங்களினை அனுப்புவதற்கு மற்றும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து நுகர்வோர் தொழிற்சங்கங்கள் மற்றும் மாகாண ஆணையாளர்களினை விழிப்புணர்வூட்டுவதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) 2018 ஒக்தோபர் 16 இல் நடாத்தப்பட்ட நுகர்வோர் வாழ்க்கைச் சுட்டெண் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊவா மாகாண விவசாயிகளிடமிருந்து கிலோவொன்று ரூபா 92 உத்தரவாதமளிக்கப்பட்ட விலையில் உருளைக்கிழங்குகளை கொள்வனவுசெய்வதற்கு சிறிலங்கா கென்சியுமர் கோப்பரடி சொலைடி லிமிட்டட்டிற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினூடாக பொதுத்திறைசேரியினால் 2 தவணைகளில் ரூபா 150 மில்லியன் தொகையொன்றை அளிப்பதற்கு அமைச்சரவையின் உப குழு தீர்மானித்திருந்தது. அதற்கமைய, 06 மாதங்கள் காலப்பகுதிக்குள் மீளச்செலுத்தும் நிபந்தனையுடன் மேற்குறித்த தொழிற்சங்கத்திற்கு ரூபா 75 மில்லியன் தொகையொன்றை அளிப்பதற்கு 2018 நவம்பர் 23 இல் அமைச்சரவையின் தீர்மானமொன்றினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் சனாதிபதி செயலகத்தின் 001-1-2-0-1409 செலவின விடயத்தின் கீழ் திணைக்களத்திற்காக பெறப்பட்ட நிதிகளில் 2018 நவம்பர் 29 இல் மேற்குறித்த தொழிற்சங்கத்திற்கு ரூபா 75 மில்லியன் தொகையொன்று அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், தொழிற்சங்கத்தினால் கடன்களினை மீளச்செலுத்துகையில் நிபந்தனைகளினை | கடன்களினை மீளச் செலுத்துகையில் நிபந்தனைகளை மீறுதல் அல்லது தாமதமாகும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பணத்தை அறவிடுவதற்காக பாதுகாப்பு பிணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உருளைக் கிழங்கு விவசாயிகளுக்கு பணம் வழங்குதல் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததனால் பிணை முறியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | மீறுதல் அல்லது தாமதாகும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய பணத்தை அறவிடுவதற்கு பாதுகாப்பு பிணையொன்றை பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | கூட்டுறவு தொழிற்சங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட உருளைக்கிழங்குகள் 3 களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமான 2 களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட ரூபா 85,823,850 பெறுமதியுடைய 932,868 கிலோகிராம் உருளைக்கிழங்குகள் அழிவடைந்து காணப்பட்டன. ஆகையினால் உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குச் சொந்தமானதாகக் காணப்பட்ட 8 ஆம் இலக்க வெயாங்கொட களஞ்சியம் சேதமடைற்து காணப்பட்டது. கூட்டுறவு தொழிற்சங்கத்திற்கு வழங்கப்பட்ட பணம் மீள செலுத்துகைகளாக பெறப்பட வேண்டியதுடன் திணைக்களம் மற்றும் அமைச்சினூடாக திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டுமென, 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதிய MIC/116/COL/Letters ஆம் இலக்க வர்த்தக மற்றும் வாணிப அமைச்சு செயலாளரின் கடிதத்தின்மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் அனைத்து வேலைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை வேலைகளும் திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டிருந்ததென மேலும் அறிவிக்கப்பட்டது. இருப்பினும், உருளைக் கிழங்குகளினை விற்பதற்காக தொழிற்சங்கத்தில் முறையான ஏற்பாடுகள் காணப்படாமையினால் இது தொடர்பில் திணைக்களத்தினால் போதுமானதொரு மேற்பார்வையொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் திணைக்களத்தினால் போதுமான மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | கூட்டுறவு தொழிற்சங்கங்களினால் நேரடியாக அமுல்படுத்தப்பட்டிருந்த இந்த நிகழ்ச்சித்திட்டத்தை திணைக்களம் மேற்பார்வை செய்திருந்ததுடன் சம்பந்தப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் |